

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
# ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 169/2017
தேதி : 31.12.2017

## ஆங்கில புத்தாண்டு வாழ்த்து

"ஜல்லிக்கட்டு தமிழர்களின் கலாச்சார, பண்பாட்டு உரிமை, அதை விட்டுக்கொடுக்க மாட்டோம்" என்று உலகையே திரும்பிப் பார்க்கும் விதமாக, ஒட்டு மொத்த தமிழ் இளைஞர்களின் அறப்போராட்டாத்தோடு தொடங்கிய 2017 ஆம் ஆண்டு,விவசாயிகள் தற்கொலை, வரலாறு காணா வறட்சி, தொடர்ந்து மழை வெள்ளம், டெங்கு, அனிதா மரணம், அரசியல் குழப்பங்கள், நெடுவாசல்-கதிராமங்கலம் போராட்டங்கள், கந்துவட்டி கொடுமைகள், ஒக்கி புயல் பாதிப்பு, மீனவர்கள் காணாமல்போன சோகம் என்று தமிழகத்திலும், பண மதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் ஜிஎஸ்டி வரிவிதிப்பால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு என்று தேசிய அளவிலும், பலவகையிலும் சவால்களையும், சோதனைகளையும், சோக நினைவுளையும் பதிவு செய்துவிட்டு முடிவுக்கு வந்து தற்போது 2018 ஆங்கிலப் புத்தாண்டு மலர்கிறது.

இப்புத்தாண்டு, கடந்த ஆண்டைவிட, மேலும் நம்பிக்கையை ஊட்டுவதாய், மகிழ்ச்சியை விதைப்பதாய், சோதனைகளும் வேதனைகளும் மறைந்து சாதனைகள் நிரம்பியதாய், மாற்றம் நிறைந்த ஆண்டாக மலர்ந்திட வேண்டும். அதற்கேற்றவகையில், மக்கள் அனைவருக்கும் அன்பும் அறநெறியும் கலந்த மன உறுதியும், நல்லெண்ணமும் பெருகிட வேண்டும். உலகெங்கும் பேதங்களும், பிரிவினைகளும் நீங்கி, மகிழ்வும், மனநிறைவும் தழைத்திட வேண்டும்.அந்தவகையில்,கடந்து மறைந்த காலம், 2018 வடிவில் புதுப்பொலிவோடு பிறப்பதை மகிழ்வோடு வரவேற்போம். சமத்துவ மக்கள் கட்சி சார்பில் அனைவருக்கும் அன்பு கலந்த ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com